**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

**SPL.CC.17/2025**

**P.W-3 சுப்ரமணியன்** **Dated.17.10.2025**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

துறைவிதிகளின் படி வாய்மொழியாக கொடுக்கப்படும் உத்தரவு பின்னர் எழுத்து மூலமாக கொடுக்கப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்படவில்லை என்றால் அதை கேட்டுபெறவேண்டியது என்னுடைய கடமை என்றால் எனக்கு தெரியவில்லை. இன்றைய தேதி வரை இந்த வழக்கின் நான் அலுவல் சாட்சியாக இருக்க என்னுடைய துறை அதிகாரிகள் எழுத்துபூர்வமான உத்தரவு வழங்கவில்லை என்றும், நானும் கேட்டுப்பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் பயணப்படி எதுவும் வாங்கவில்லை. 24.06.2020ம் தேதி நான் என்னுடைய வீட்டிலிருந்து காலை சுமார் 08.00, 08.15 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டேன். அன்றைய தேதியில் லஞ்ச ஒழிப்பு துறையிலிருந்து என்னை அழைக்கவில்லை. என்னுடைய செல்போன் எண்.8610132286 மற்றும் 9750705962 ஆகும். இந்த வழக்கு சம்பவகாலத்தில் நான் மேற்படி இரண்டு எண்களை தான் பயன்படுத்தினேன். அன்றைய தினம் நான் 08.30 மணிவாக்கில் லஞ்சஒழிப்பு அலுவலகத்திற்கு என்னுடைய மோட்டார் சைக்கிளில் நான் மட்டும் சென்றேன். நான் போய் 05.00 நிமிடத்தில் ராதா வந்தார். இந்த வழக்கு புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் எப்போது தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. புகாரின் ஜெராக்ஸ் நகலை என்னிடம் கொடுத்து படிக்கசொன்னார்கள். அன்றைய தினம் நான் சந்தித்த லஞ்சஒழிப்பு ஆய்வாளர் பெயர் ஞாபகமில்லை. வழக்கின் குற்றஎண் மற்றும் சட்டப்பிரிவுகள் ஆய்வாளர் சொல்லி எனக்கு தெரியும். நான் போகும்போது 2 ஆய்வாளர்கள் இருந்தார்கள். டி.எஸ்.பி. இல்லை. அன்றைய தினம் என்னை 2 ஆய்வாளர்கள் விசாரிக்கவில்லை. ஒரு ஆய்வாளர் விசாரித்தார். எந்த ஆய்வாளர் மகசர் தயாரித்தார் என்றால் என்னை விசாரித்த ஆய்வாளர் தயாரித்தார். அவர்

பெயர் ஞாபகமில்லை. எனக்கு வீரமுத்துவை தெரியாது. அவரை பார்த்தது கிடையாது. நொச்சியம் கிராமத்திற்கு விஜிலன்ஸ் ஜீப்பில் சென்றோம். அது அரசு வாகனம். அதில் விஜிலன்ஸ் அல்லது போலிஸ் என்று எழுதப்பட்டிருந்ததா என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. நான் விஜிலன்ஸ் அலுவலகம் சென்றபோது அங்கிருந்த ஆறுமுகத்தை விசாரித்தேன். அவர் திருமணம் ஆனவரா என்று எனக்கு தெரியாது. அவர் நொச்சியம் கிராமத்தில் வசித்துவந்ததாக சொன்னார். அவர் பெரம்பலூரில் வசித்து வருகிறரா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. அவர் மும்முனை மின்சாரம் பெறுவதற்கு ரூ.10 ஆயிரம் கட்டணமாக கட்டவேண்டும் என்றவிவரம் தெரிந்துகொண்டேன். நொச்சியம் கிராமத்திற்கு ஒரு ஜீப்பில் நான், ஆறுமுகம், ஒரு இன்ஸ்பெக்டர், ராதா, 2 கான்ஸ்டபிள்கள் மற்றும் டிரைவரோடு சென்றோம். அது என்ன மாடல் ஜீப், கலர் என்று நான் சரியாக கவனிக்கவில்லை. நொச்சியம் கிராமத்திற்கு சென்று யார் வீட்டில்தங்கினோம் என்றால் வாதி ஆறுமுகம் குத்தகைக்கு எடுத்த வீட்டில் தங்கினோம். அது யாருக்கு சொந்தமானது என்று தெரியாது. அந்த சமயத்தில் வாதி ரூ.20,000/– எடுத்துவந்தாரா என்று எனக்கு தெரியாது. ரூ.10,000/– எடுத்துவந்தார் என்று எனக்கு தெரியும். அந்தசமயத்தில் எதிரிக்கு போன் செய்யுங்கள் என்று யார் அறிவுறித்தியது என்றால் இன்ஸ்பெக்டர் போன் செய்யசொன்னார். எதிரிக்காக காத்திருந்த நேரத்தில் என்னுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தது யார் என்றால் யாருமில்லை. அந்த சமயத்தில் தலைமைக்காவலர் மனோகரன் என்னை தொடர்புகொள்ளவில்லை. அவர் ஆறுமுகத்தை தொடர்பு கொண்டாரா என்று எனக்கு தெரியாது. மதியம் நான் சாப்பிடவில்லை. நானும், ஆறுமுகமும் உள்ளே இருந்தோம். மற்றவர்கள் வெளியே இருந்தார்கள். அவர்கள் எங்கே சாப்பிட்டார்கள் என்று தெரியாது. போலிசார் அந்த வீட்டை தாண்டி கொஞ்சம் தள்ளி இருந்தார்கள். ஆறுமுகம் வீட்டின் மாடியில் போலிசார் இருந்தார்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. உண்மையில் நான் அங்கு போய்இருந்தால் இந்த விவரம் எல்லாம் ஞாபகம் இருந்திருக்கும் என்றும், பொய்யாக சாட்சியம் அளிப்பதால்

இந்த விவரங்கள் எனக்கு ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி தான் வெளியூரில் இருப்பதாகவும் வருவதற்கு 2 நாட்கள் ஆகும் என்று சொன்னபின்னரும் ஏன் அங்கு மாலை வரை இருந்தோம் என்றால் அப்போருத ஆறுமுகம் சமயத்தில் அவர் ஈவினிங் பணம் கேட்க வருவார் அதனால் மாலைவரை காத்திருக்கலாம் என்று சொன்னார். அதற்கு ஆய்வாளர் ஈவினிங் வரை காத்திருங்கள் என்று சொன்னார். மாலை 05.00, 05.15 மணியளவில் நொச்சியத்திலிருந்து புறப்பட்டோம். 05.30லிருந்து 05.45க்குள் விஜிலன்ஸ் அலுவலகம் சென்றோம். அங்கு சுமார் 1 1/2 மணிநேரம் இருந்தோம். அந்த சமயத்தில் ஆய்வாளர் மகசர் தயார் செய்தார். அவர் பெயர் ஞாபகமில்லை. ராதா காலையில் எந்த வாகனத்தில் வந்தார், மாலையில் எந்த வாகனத்தில் சென்றார் என்று எனக்கு தெரியாது. அன்றையதினம் நான் வருகைப்பதிவேடு மற்றும் டைரியில் கையெழுத்து செய்யவில்லை என்றால் வருகைப்பதிவேட்டில் கையெழுத்து செய்யவில்லை. டைரி வாரத்திற்கு ஒருமுறை எழுதுவோம். டைரி மற்றும் வருகைப்பதிவேட்டை இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளரிடம் நான் கொடுக்கவில்லை. அவர் கேட்கவில்லை. அன்றையதினம் நான் விடுப்பு எடுக்கவில்லை. 24.06.2020ம் தேதி விஜிலன்ஸ் வேலை முடிந்ததாக எழுதுப்பூர்வமான அறிக்கையை என்னுடைய துறை அதிகாரிகளிடம் நான் கொடுக்கவில்லை. 24.06.2020ம் தேதி அன்று நடந்த விவரம் குறித்து என்னுடைய அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. டைரியில் எழுதியுள்ளேன். மீண்டும் பொறிவைப்பு நடவடிக்கைக்கு நாங்கள் அழைப்போம், அப்போது வரவேண்டும் என்று எந்த ஆய்வாளர் சொன்னார் என்று எனக்கு பெயர் ஞாபகமில்லை. ஒரே பொறிவைப்பு நிகழ்வுக்காக மீண்டும் மீண்டும் வரவேண்டுமா, எதிரியை விரட்டி விரட்டி பிடிக்க வேண்டுமா என்று நான் கேட்கவில்லை. என்னுடன் வந்த ராதா இம்மாதிரி கேட்டாரா என்று எனக்கு தெரியாது. 26.06.2020, 27.06.2020, 29.06.2020 ஆகிய தேதிகளில் லஞ்சஒழிப்பு துறை அதிகாரிகள் என்னை தொடர்பு கொண்டு பேசினார்களா

என்றால் 29.06.2020ம் தேதி பேசினார்கள். 29.06.2020ம் தேதி நான் என்னுடைய ஆபிசில் இருக்கும்போது லஞ்சஒழிப்பு ஆய்வாளர் என்னை தொடர்பு கொண்டு அலுவலகம் வரசொன்னார். அந்த ஆய்வாளர் பெயர் ஞாபகமில்லை. ஒரே ஆய்வாளர் தான் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். 29.06.2020ம் தேதி என்னை சாட்சியாக வரசொல்லி எனக்கோ, என்னுடைய துறைக்கோ எழுதுப்பூர்வமான கோரிக்கை ஆய்வாளரிடமிருந்து வரபெறவில்லை. 29.06.2020ம் தேதி சாட்சியாக செல்லுங்கள் என்று என்னுடைய துறையிலிருந்து யாரும் சொல்லவில்லை. சாட்சி தான் ரேஞ் ஆபிசரிடம் சொல்லிவிட்டு சென்றதாக சொன்னார். என்னுடைய செல்போன் எண் எப்படி ஆய்வாளருக்கு தெரியுமென்றால் முதலில் சென்றபோது கேட்டு வாங்கிகொண்டார்கள். 29.06.2020ம் தேதி மதியம் 01.30 மணிக்கு லஞ்சஒழிப்பு அலுவலகத்திற்கு சென்றேன். அன்றையதினம் எந்த எண்ணில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது என்றால் 9498110576. ( எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் செல்போனை பார்த்து கூறலாம் என்று சொன்னதால் சாட்சி சொல்போனை பார்த்து எண்ணை கூறுகிறார். மேலும் சாட்சி செல்போனை பார்த்து அன்றையதினம் பேசிய ஆய்வாளர் பெயர் ரத்தினவள்ளி என்று கூறுகிறார்.) அன்றையதினம் வந்தது சாதரண அழைப்பாகும். வாட்ஸ்அப் அழைப்பு இல்லை. ஆய்வாளரிடம் ஆறுமுகம் எப்போதவது அவருடைய செல்போனை காட்டி பதிவு செய்ததை காண்பித்தாரா என்றால் 24.06.2020ம் தேதி காண்பித்தார். பதிவு செய்யப்பட்டிருந்த வீடியோ மற்றும் ஆடியோவை பார்த்தேன். அதை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்று எனக்கு தெரியாது. 29.06.2020ம் தேதி சாட்சியாக செல்வதற்கு முன்பு ஏற்கனவே வாய்மொழியாக அனுமதி கொடுத்த அதிகாரியிடம் நான் கேட்டு செல்லவில்லை. ரேஞ்சரிடம் சொல்லிவிட்டு சென்றேன். தகவல் சொல்வது என்பது வேறு மற்றும் அனுமதி பெறுவது என்பது வேறு என்றால் சரிதான். நான் 01.30 மணிக்கு லஞ்சஒழிப்பு அலுவலகத்திற்கு சென்றபின்னர் சுமார் 05.00 நிமிடம் கழித்து ராதா அங்கு வந்தார். அங்கு ஆறுமுகம் இருந்தார். அங்கு லஞ்சஒழிப்பு அலுவலகத்தில் சுமார்

01.15, 01.30 மணிநேரம் இருந்தோம். சரியாக 01.45 மணியளவில் ஒப்படைப்பு மகசர் தயார் செய்து அதில் ஆறுமுகம் கையெழுத்து செய்தாரா என்றால் 01.45 மணிமுதல் 02.45 மணிவரை மகசர் தயார் செய்யப்பட்டது. அதில் ஆறுமுகம் கையெழுத்து செய்தாரா என்று எனக்கு தெரியவில்லை. நான் கையெழுத்து செய்தேன். ஆறுமுகம் கையெழுத்து இருந்ததை நான் பார்த்தேனா என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும். 29.06.2020ம் தேதி பினாப்தலின் தடவப்பட்ட தாள்களை கொண்டுவருமாறு ஆய்வாளர் ஆறுமுகத்திடம் சொன்ன விவரம் எனக்கு தெரியும். 24.06.2020ம் தேதி தான் சொல்லும்போது கொண்டுவருமாறு ஆய்வாளர் சொன்னார். 29.06.2020ம் தேதி எத்தனை மணிக்கு ஆறுமுகத்தை ஆய்வாளர் வர சொன்னார் என்று எனக்கு தெரியாது. 29.06.2020ம் தேதி 02.45 மணியளவில் அதே விஜிலன்ஸ் ஜீப்பில் நாங்கள் போனோம். நான், ஆறுமுகம், இன்ஸ்பெக்டர், ராதா, கான்ஸ்டபிள்கள் சென்றோம். அன்றையதினம் ரத்தினவள்ளி ஆய்வாளருடன் வேறு ஆய்வாளர் வரவில்லை. நாங்கள் சென்ற ஜீப்பின் எண் தெரியாது. அந்த ஜீப்பின் கண்ணாடியில் கருப்பு பிலிம் ஒட்டப்பட்டிருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. அரசு வாகனம் என்பதற்கு அதனுடைய நம்பர் பிளேட்டில் G எழுதப்பட்டிருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. 29.06.2020ம் தேதி 01.30 மணியிலிருந்து சுமார் 08.00, 08.30 மணிவரை ஆறுமுகத்துடன் இருந்தேன். அவர் என்னை விட்டு பிரிந்துசெல்லவில்லை. அன்றையதினம் ஆறுமுகம் யார்யாருக்கு போன் செய்தாரா என்றால் பாலசுப்ரமணியனுக்கு போன் செய்த விவரம் தெரியும். மற்றவர்களுக்கு போன் செய்தாரா என்று எனக்கு தெரியாது. நான் உண்மையில் அவருடன் இல்லாததால் தான் அந்த விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. இ.பி அலுவலகம் செல்லாமல் அரணாரை பிரிவு ரோட்டிற்கு ஏன் சென்றோம் என்றால் வழக்கமாக அந்த இடத்திற்கு வருவார் என்பதால் சென்றோம். இ.பி அலுவலகம் செல்லும்போது சுமார் 03.50, 04.00 மணி இருக்கும். என்னிடமோ, ஆறுமுகத்திடமோ ரகசிய கேமரா அல்லது வாய்ஸ்ரெக்காடர் ஆய்வாளர்

கொடுத்து அனுப்பவில்லை. நான் செல்போனில் எதையும் ரெக்காட் செய்யவில்லை. எதிரி என்னை வெளியே இருக்க செல்லும்போது எந்த வாசலில் இருந்தேன் என்றால் தெற்கு புற ஜன்னல் ஓரத்தில் இருந்தேன். வாசலில் நிற்கவில்லை. எவ்வளவு நேரம் நின்றேன் என்றால் முதலில் 2, 3 நிமிடங்கள் இருக்கும். எதிரியிம் ஆறுமுகமும் காப்பி குடிக்க செல்லும்போது அதே அரசு ஜீப்பில் பின்தொடர்ந்து சென்றோம். பாலசுப்ரமணியம் அவருடைய வாகனத்தை ஓட்ட ஆறுமுகம் அவர் பின்னால் உட்கார்ந்து சென்றார். அந்த வாகனத்தின் உரிமையாளர் பாலசுப்ரமணியனா என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் வாகனத்தின் உரிமையாளர் பாலசுப்ரமணியன் என்று சொன்னேனா என்று எனக்கு ஞாபகமில்லை. தம்பு டீஸ்டால் இ.பி அலுவகத்திலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. எதிரியும், ஆறுமுகமும் டீ குடித்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்ததை சுமார் 6, 7 அடி தூரத்தில் இருந்து கவனித்தேன். நான் இருந்ததை இருவரும் கவனிக்கவில்லை. அவர்கள் டீ குடித்துவிட்டு சுமார் 04.00, 04.15 மணியளவில் அலுவலகம் சென்றார். உண்மையில் எதிரி பணம் வாங்க எண்ணியிருந்தால் டீ குடிக்கும் போது வாங்கியிருக்கலாம் என்றும், நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று அவர் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அலுவகத்திற்குள் தடுப்பு இருந்தது. கம்யூட்டர் இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. எதிரியின் அலுவக இருக்கைக்கு அருகில் வேறு அலுவலர் இருக்கை இருந்ததா என்றால் அருகில் இல்லை. எதிரியின் அறை வாசல் கிழக்கு பார்த்து இருந்தது. அங்கு 2 ஜன்னல்கள் இருந்தது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அமைப்பில் உள்ள அலுவகத்தை நான் பார்த்தேனா என்றால் அவ்வாறு பார்த்த மாதிரி என்னால் சொல்ல இயலாது. நான் எத்தனை மணிக்கு ஜன்னல் வழியாக பார்க்க ஆரம்பித்தேன் என்றால் சுமார் 04.20 மணி இருக்கும். சுமார் 10.00 நிமிடம் அவ்வாறு வேவு பார்த்தேன். ஆறுமுகம் சுமார் 04.35, 04.40 மணியளவில் ரூம்மை விட்டு வெளியே வந்தார். நான் ஜன்னலை ஒட்டி சுமார் ஒரு அடி தொலைவில் நின்று கவனித்தேன்.

எதிரிக்கு பின்னால் இருந்து பார்த்தால் அவருக்கு முன்பு நடக்கும் விசயங்கள் தெரியுமா என்றால் தெரியும். போலிசார் உள்ளே வந்ததும் கதவை மூடினார். கான்ஸ்டபிள்கள் மூடினார்கள். அவர் பெயர் மனோகரன். மற்றொருவர் பெயர் ஞாபகமில்லை. அவ்வாறு உள்ளே வரும்போது போலிசார் வீடியோ எடுத்தார்கள். யார் எடுத்தார்கள் என்று ஞாபகமில்லை. வீடியோ கேமிராவில் எடுத்தார்களா அல்லது செல்போனில் எடுத்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. அலுவகத்தில் இருந்த அனைவரின் செல்போனை வாங்கி ஸ்விட்சு ஆப் செய்தார்கள். எத்தனை பேர்களின் செல்போனை ஸ்விட்சுஆப் செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. போலிசாரை பார்த்தவுடன் எதிரி பதட்டமைந்ததாக நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலிசார் வந்தவுடன் எதிரிக்கு அருகில் அவருடைய உயர்அதிகாரிகள் இருந்தார்களா என்றால் பக்கத்தில் தடுப்பிற்கு அடுத்த அறையில் இருந்தார்கள். அவர்கள் உயர்அதிகாரிகளா என்று எனக்கு தெரியாது. அவர்கள் அனைவரும் ஆய்வாளரிடம் என்ன விசயம் என்று கேட்டார்கள். ஆய்வாளரிடம் எதிரி ஆவணங்களை எடுத்துகாண்பித்தார். எதிரி அவருடைய கை விரல்களை சோடியம் கார்பைனைட் கரைசலில் வைப்பதற்கு முன்பு அது என்ன நிலையில் இருந்தது என்று நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விவரம் சரிதானே என்றால் வெள்ளை நிறமாக இருந்தது. அது எத்தனை மில்லி என்றால் 180மில்லி பாட்டிலில் ஊற்றினார்கள். அது கண்ணாடி பாட்டிலாகும். அதன் மூடி எதனால் ஆனது என்று எனக்கு தெரியாது. உண்மையில் நான் அதை பார்க்காததால் தான் தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. சோடியம்கார்பனைட், பினாப்தலின் அமிலமா அல்லது காரமா என்று எனக்கு தெரியாது. சோடியம்கார்பனைட் மற்றும் பினாப்தலின் எங்கு எதில் வைக்கப்பட்டிருந்தது மற்றும் யாருடைய பொறுப்பில் இருந்தது என்று எனக்கு தெரியாது. முதல்சோதனை செய்யப்பட்டபோதும் இந்த விவரம் எனக்கு தெரியாது. சோடியம்கார்பனைட் மற்றும் பினாப்தலின் குறித்து போலிசார்

சொல்லி தான் எனக்கு விவரம் தெரியும். எந்த பிளாஸ்டிக் கப்பை வைத்து 180மில்லி அளந்தார்கள் என்றால் அளக்கவில்லை. 180மில்லி பாட்டிலில் ஊத்தினார்கள். 3 சோதனைக்கும் ஒரே அளவில் தான் கரைசல் தயாரித்தார்கள் என்றால் கொஞ்சம் முன்ன, பின்ன இருக்கும். பை துணி பையாகும். துணி பையை கரைசலில் லேசாக தொட்டார்களா அல்லது முக்கினார்களா என்றால் நன்றாக முக்கினார்கள். ஒரு துணி பையை முழுவதுமாக முக்கினால் கரைசலை உறிந்து விடும் என்றால் முழுதுணி பையை முக்கவில்லை. பையின் நுணிப்பையை முக்கினார்கள். அந்த பகுதி நன்றாக நனைந்தது. துணிப்பபையை நனைத்தபிறகு கரைசலின் அளவு குறைந்தது. பை சோதனை செய்த கரைசலுக்கு பி என்று பெயரிடப்பட்டது. நான் லேபிளில் கையெழுத்து செய்தேன். அந்த லேபிளை யார் தயார் செய்தார்கள் என்று ஞாபகமில்லை. நான் அந்த இடத்தில் இல்லாததால் தான் லேபிளை யார் தயார் செய்தார்கள் என்று கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரை நான் படித்துபார்த்தேன். அதில் எதிரி இருந்ததாக கூறப்படும் அறையின் ஜன்னல்கள் பற்ற குறிப்பிடபடவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஏற்கனவே முடிந்த வேலைக்கு எதிரி ரூ.10ஆயிரம் பணம் கேட்டார் என்பது ஆறுமுகத்தின் குற்றச்சாட்டா என்றால் அதுபோக மேலும் எக்ஸ்ட்ரா ரூ.10ஆயிரம் கேட்டார் என்பது ஆறுமுகத்தின் குற்றச்சாட்டாகும். ஆய்வாளர் கைப்பற்றியதாக கூறப்படும் Demand Notice மற்றும் Sancation Orderஐ நான் படித்து பார்த்தேன்.

**<u>நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.